DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**S.T.C.No. 17/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | | | |
| Name | : | ரெங்கராஜன் | Age | : | 65 |
| S/o | : | அழகன் | Occupation | : | BSNL பணிபுரிந்து ஓய்வு |
| Village | : | வசந்தம் நகர் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 13th day of February 2026.

**13.02.2026**

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

**1.** எதிரியிடம் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதி 10.05.2020 அல்லது 10.08.2020 என்றால் 10.08.2020. ம.சா.ஆ.3 ல் 10.05.2020–ம் தேதியன்று ரூ. 7,00,000/–ம் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 10.08.2020 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. புரோ நோட் எழுதிக்கொடுத்தது 10.05.2020 அல்லது 10.08.2020 என்றால் 10.08.2020. எதிரியால் எனக்கு கொடுக்கப்பட்ட காசோலை 10.06.2023 ல் கொடுக்கப்பட்டது. நான் நீதிமன்ற விசாரணையில் 20.12.2021 காசோலையை பெற்றுக்கொண்டு புரோ நோட்டை திருப்பிக்கொடுத்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 10.06.2023 ல் காசோலை கொடுக்கப்பட்டபோது தான் புரோ நோட்டை திருப்பி வழங்கினேன். 20.12.2021 ல் எதிரியிடமிருந்து காசோலை வாங்கவில்லை என்றால் சரிதான். எனது வழக்கறிஞர் அறிவிப்பில் 25.03.2022 ல் பணம் கேட்க சென்றதாக கூறவில்லை என்றாலும் நான் செல்லவில்லை என்றாலும் சரிதான்.

**2.** வழக்கறிஞர் அறிவிப்பில் நான் அவ்வாறு சொல்லியுள்ளேன் என்றால் அது தவறானது என்றால் சரிதான். எதிரி என்னிடம் எத்தனை காசோலை கொடுத்தார் என்றால் ஒரு காசோலை கொடுத்தார். "ஆகையால் தாங்கள் இந்த அறிவிப்பு கிடைத்த 15 நாட்களுக்குள் எனது கட்சிக்காரரிடம் 10.08.2020 ம் தேதி கடனாக கொடுத்த ரூ. 7,00,000/–ம் எனது கட்சிக்காரரிடம் திருப்பிக்கொடுத்து 10.08.2020 ம் தேதி கொடுத்த பூர்த்தி செய்யப்படாத தாங்கள் கையொப்பமிட்ட தாங்கள் மனைவி மற்றும் மகள் கையொப்பமிட்ட புரோ நோட்டுக்களையும் 10.06.2021 ம் தேதி தாங்கள் 24.08.2023 ம் தேதியிட்டு கையொப்பமிட்டு பூர்த்தி செய்து கொடுத்த ரூ. 7,00,000/– த்தையும் திருப்பிக்கொடுக்கவேண்டுமென்றும்" என்று ம.சா.ஆ.3 கடைசி பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அறிவிப்பானது 25.08.2023 ம் தேதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே 25.08.2023 ம் தேதி காசோலை மற்றும் புரோ நோட்டு எனது கைவசம் தான் இருந்துள்ளது என்றால்

சரியல்ல. காசோலையும், புரோ நோட்டுக்களும் என் வசம் தான் இருந்தது எதிரியை பழி வாங்குவதற்காக பூர்த்தி செய்யப்படாத காசோலையை வைத்து எதிரி மீது பொய்யான வழக்கை தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

3. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ம.சா.ஆ. 1 காசோலையில் உள்ள பெயர் எழுத்தாலும், எண்ணாலும் நான் நிரப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் புரோ நோட்டுக்கள் என் கைவசம் தான் உள்ளது என்றாலும், நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை வெளியாகும் என்று தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் நீதிமன்ற விசாரணையில் 20.12.2023 ல் காசோலை பெற்று புரோ நோட்டை திருப்பிக்கொடுத்ததாக கூறுவது முன்னுக்குப்பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ. 3 ன் படி நான் புரோ நோட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றால் சரியல்ல. எதிரி பணம் பெறவில்லை என்றால் சரியல்ல. வங்கியிலிருந்து பெறப்பட்ட ம.சா.ஆ.2 யை எங்கேயோ வைத்து காலதாமதமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. ம.சா.ஆ 3 உண்மைக்கு புறம்பானது என்றும் அதற்கு பதில் அறிவிப்பு கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. என்னிடமிருந்து பணத்தை பெற்றுக்கொள்ளவேண்டிய அவசியமும் எதிரிக்கு இல்லை என்றால் சரியல்ல. எதிரி ராணுவத்தின் மூலமாக பண பலன்களை பெற்றிருப்பார் என்றால் தெரியவில்லை. என்னுடைய அறிவிப்பில் முதல் பக்கத்தில் எதிரி வீடு கட்டுவதற்கு வங்கியிலிருந்து பணம் வாங்கியதாகவும் அவ்வாறு பணம் கட்டாததால் ஜப்தி செய்ய வந்ததாகவும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எந்த வங்கியிலிருந்து கடன் வாங்கினார் எப்போது ஜப்தி செய்ய வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஜப்தி செய்ய வந்ததற்கான ஆதாரம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. உண்மைக்கு புறம்பாக பொய்யான வழக்கை தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.02.13 20:14:05 +0530